மங்கள வைபவங்களுக்கு தேவையான பட்டுப் புடைவைகள் மற்றும் சிறுவர்களுக்கான தெரிவுகளுக்கு
✻ சோபனா ✻
ஆடை அகம்
16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளில் சோபிக்க சோபனா
✻ சோபனா ✻
ஆடை அகம்
16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 22 வியாழக்கிழமை (06– 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 41

# தாவடி, சாவகச்சேரிப் பகுதிகளில் புக்காரா, சுப்பசொனிக் தாக்குதல்

## 6 பேர் பலி; 7 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜனவரி, 6

ஸ்ரீலங்கா விமானப்படையின் புக்காரா மற்றும் சுப்பசொனிக் விமானங்கள் நேற்று முற்பகலில் சாவகச்சேரி மற்றும் தாவடிப் பகுதிகளில் நடத்திய—கண்மூடித்தனமான—குண்டு வீச்சு, றொக்கட் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் ஆறு பேர் பலியானார்கள்; ஏழு பேர் படுகாயமுற்றனர்; பெருமளவு உடைமைகள் நாசமாகின.

## தாவடியில் 3 பெண்கள், சிறுமி உடல் சிதறிப் பலியாகினர்

### சதைத் துண்டங்கள் நாலாபுறமும் வீசப்பட்டிருந்தன

கொக்குவில், ஜன. 6

தாவடி, சுதுமலைப் பகுதிகளில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இரு புக்காரா விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரு பாலகி மற்றும் மூன்று பெண்கள் உடல் சிதறி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

தாவடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் — தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சற்றுத் தள்ளி— தாவடி உப தாலகத்துக்குப் பின்புறமாகவுள்ள பொதுமக்கள் குடியிருப்பு மீதே குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வானத்தில் வட்டமிட்ட இரு புக்காராக்களில் ஒன்று திடீரென குத்திப் பதிந்து குண்டுகளை வீசியது. இதனால் மூன்று வீடுகள் மற்றும் உபதபாலகம் தாவடி கிராம சேவையாளர் அலுவலகம் ஆகியன பலத்த சேதமடைந்தன. பத்து வீடுகளும் சேதமுற்றன.

செல்வி திருஅம்பலம் சரஸ்வதி (வயது 39), அவரின் பெறாமகள் செல்வி சண்முகநாதன் சாந்தினி (வயது 23), திருமதி பொன்னுத்துரை செல்வரெத்தினம் (வயது 65), அவரின் பேர்த்தியான மகேஸ்வரன் லோஜிகா (வயது 3) ஆகியோரே இக்குண்டு வீச்சில் உடல் சிதறிப் பலியாகினர். இவர்கள் அனைவரும் தையிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து தாவடியில் வசித்து வந்தவர்களாவர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## 500 மாணவர்கள் உயிர் தப்பினர்!

கொக்குவில், ஜன. 6

தாவடியில் நேற்று குண்டு வீச்சு நடைபெற்ற சமயம், அந்த இடத்துக்கு அருகே பாடசாலை ஒன்றில் கல்வி பயின்று கொண்டிருந்த சுமார் ஐநூறு மாணவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு சுமார் நூறுயார் தூரத்தில் அமைந்துள்ள தாவடி தமிழ்க் கலவன் பாடசாலையிலேயே அச்சமயம் ஐநூறு மாணவர்கள் இருந்தனர்.

குண்டு வீச்சில் உயிரிழந்த பாலகியின் தாயாரும் சகோதரரும் குண்டு வீச்சு நடப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னரே கடைக்குப் பொருள்கள் வாங்கச் சென்றனர் என்றும் —

அவ்வேளை வீட்டில் இல்லாததால் அவர்கள் தப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-143)

## சுப்பசொனிக், புக்காராக்கள் சாவகச்சேரியில் தாக்குதல்

### மாணவியும், மற்றொருவரும் உயிரிழப்பு

சாவகச்சேரி, ஜன. 6

சாவகச்சேரி — கெருடாவில் பகுதியில் நேற்று முற்பகல் புக்காரா விமானங்களும் அதனைத் தொடர்ந்து சுப்பசொனிக் விமானமும் நடத்திய குண்டுவீச்சு மற்றும் றொக்கட் தாக்குதல்களினால் இருவர் உயிரிழந்தனர். ஏழு பேர் படுகாயமுற்றனர்.

முற்பகல் 11.15 மணியளவில் சாவகச்சேரிப் பகுதியை வட்டமிட்ட இரண்டு புக்காரா விமானங்கள் சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் மாறி மாறி மூன்று குண்டுகளை வீசின.

இக்குண்டு வீச்சில் கோபால சிங்கம் குலேந்திரா (வயது 16) என்ற சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி உயிரிழந்தார். நேற்று வெளியான தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு முடிவுகளை அறிவதற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியபோதே இவர் குண்டு வீச்சுக்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது.

(3ஆம் பக்கம் பார்க்க)

## மாவுடன் 'மாஹோ' நாளை வருகிறது

### 80 பயணிகளும் வருவர்

யாழ்ப்பாணம், ஜன. 6

திருகோணமலை பிரிமா ஆலையில் இருந்து 3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக் கொண்டு 'மாஹோ' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு வந்த 80 பயணிகள் இக்கப்பலில் வரவிருப்பதாக அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் மாவை இறக்கி முடித்து மீண்டும் இக்கப்பல் திருகோணமலைக்குச் சென்று மேலும் ஒரு தொகுதி மாவை ஏற்றிவர ஏற்பாடாகியுள்ளதாகவும் யாழ். அரச அதிபர் கூறினார். (ஒ-3)

## தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கிழக்கில் சுவரொட்டிகள்

### வேட்பாளர் ஒருவர் சுட்டுக் கொலை

உள்ளூராட்சித் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கக் கோரும் சுவரொட்டிகள் கிழக்கில் பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருப்பதாக 'வெரித்தாஸ்' வானொலி அறிவித்தது.

இதற்கிடையில்—

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வது நேற்று ஆரம்பிக்கப்பட்ட வேளையில், இத்தேர்தலில் அரசை ஆதரித்துப் போட்டியிட இருந்த தமிழ் வேட்பாளர் ஒருவர் சித்தாண்டியில் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

"தேர்தலில் போட்டியிட நினைக்கும் எவருக்கும் இந்தக் கதியே ஏற்படும்என்ற எச்சரிக்கை அட்டை ஒன்றும்" வேட்பாளரின் சடலத்தின் அருகே காணப்பட்டதாகவும் வெரித்தாஸ் தெரிவித்தது.

உள்ளூர்ராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வது நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்ட வேளை இந்தக் கொலைச் சம்பவம் இடம் பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது. (அ-உ-5)

## வன்னியில் முதலாவது நீதிமன்றம் திறப்பு

வன்னிப்பெரு நிலப்பரப்பில் நேற்று முதலாவது தமிழீழ மாவட்டநீதிமன்றம் திறந்துவைக்கப்பட்டது. தமிழீழத்தில் திறந்து வைக்கப்பட்ட ஐந்தாவது மாவட்ட நீதிமன்றம் இதுவாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு இந்த மாவட்ட நீதிமன்றம் திறந்து வைக்கப்பட்டது.

வன்னி மாவட்ட விசேடதளபதி திரு ரவி தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றிவைக்க, வன்னி மாவட்ட தளபதி திரு. குட்டி நீதிமன்றத்தைத் திறந்து வைத்தார்.

நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா தலைமையில் நடந்த இவ்விழாவில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் மங்கள விளக்கை ஏற்றி வைத்தார்.

வன்னி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு ஞானம் பெயர்பலகையை திரைநீக்கம் செய்தார். திறப்பு விழாவை அடுத்து சம்பிரதாய பூர்வமாக இரு வழக்குகள் விசாரிக்கப்பட்டன. (ஒ-3-15)

## முல்லை, வவுனியா, மன்னார் பகுதிகளிலும் நீதிமன்றங்கள்

### விரைவில் திறக்கப்படும் எனத் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 6

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தைத் தொடர்ந்து முல்லை மாவட்டத்திலும், வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் மாவட்ட நீதிமன்றங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இதுவரை காலமும் தமிழீழ இணக்க மன்றுகளில் தீர்க்கப்படாத வன்னி பெருநிலப்பரப்பு மக்களின் வழக்குகளும், காவல் துறையினரால் தீர்க்கப்படாத வழக்குகளும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் தீர்த்து வைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-3)

## இம்மாத ஓய்வூதியத்துடன் அலவன்ஸூம் கிடைக்கும்

1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்க சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர்கள் இம்மாதத்தில் இருந்து மாதாந்த ஓய்வூதியத்துடன் மாதாந்த அலவன்ஸையும் பெற்றுக்கொள்ளவிருக்கிறார்கள்.

50 ரூபாவில் இருந்து 200 ரூபா வரையிலான படிப் பணம் (அலவன்ஸ்) இவர்களுக்கு வழங்கப்படும்.

இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென 18 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஏற்கனவே சகல பிரிவுச் செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ-எ)

### பொதுக் கல்வித் தேர்வில்

## அதிக புள்ளிகளைப் பெற்று வேம்படி மாணவி முதலிடம்

யாழ்ப்பாணம், ஜன. 6

1993 இல் நடைபெற்ற தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களையும், கோட்ட மட்டத்தில் முதல் இரண்டு இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் நேற்று வெளியிடப்பட்டது.

இவர்கள் தேசியத் தலைவரின் பரிசுகளையும் பாராட்டு இதழ்களையும், பேரவையின் சான்றிதழ்களையும் பெறுவர்.

தமிழீழக் கல்விக் கழகம் நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்ட பெறுபேறுகளின் பிரகாரம் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் முதலாம், மூன்றாம் இடங்களையும், ஹாட்லிக் கல்லூரி மாணவன் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

தேசிய மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும் சிறப்பாகத் தேறியவர்கள் பெற்ற பெறுபேறுகள், புள்ளிகளின் விவரம் வருமாறு:-

ஊர்காவற்றுறை

[illegible] (... புனித மரி ... ) — [illegible] புவனச்சந்திரன் ரவீந்திரன் — (யாழ்ரன்) — 5டி, 1சி, 2எஸ் — 545

(3ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய எல்லையில் சண்டை

இந்திய—பங்களாதேஷ் எல்லைப் பகுதியில்— பிரச்சினைக்குரிய முகுரிச்சா ஆற்றுப் பகுதியில்—இரு நாட்டு எல்லைக் காவல் படையினருக்கும் இடையே சண்டை இடம்பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-5)

### முச்சந்தி முரளி



வீட்டுத் தோட்டத்திலை வீட்டுக்குள்ளையும் ஆட்களை புதைத்திருப்பினம் [illegible] உத்த அநியாயப் பேர்வழியள்......!

## பலாலி படையினர் கடும் ஷெல் வீச்சு!

பலாலி இராணுவ முகாம் இராணுவத்தினர் நேற்றுக் காலை 8 மணி முதல் அச்சுவேலி, தோப்புக்காடு, இடைக்காடு, வளலாய், தொண்டமானாறு மற்றும் வடமராட்சிப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்; வேட்டுக்களும் விடாது தீர்க்கப்பட்டன.

வளலாயில் தரித்து நின்ற படையினர் பத்தமேனி, கதிரிப்பாய்ப் பகுதிகளை நோக்கி முன்னேற முயன்ற வேளையிலேயே மோதல் ஏற்பட்டதாகவும் —

அதையடுத்தே படையினர் தமது நிலைகளில் இருந்த ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

அச்சமயம் ஹெலிக்கொப்டர் ஒன்றிலிருந்தும் 50 கலிபர் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இத்தாக்குதல்களினால் அச்சுவேலிப் பகுதிப் பாடசாலைகள் காலையிலேயே செயலிழந்தன.

காலை 9 மணியளவில், பலாலியிலிருந்து ஏவப்பட்ட பீரங்கி ஷெல்கள் கரணவாய், குஞ்சர்கடைப் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

புகையிலை நாற்று வாங்குவதற்காக அப்பகுதிக்கு வந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கடற்படை வெறியாட்டத்தில்

## காணாமற்போன 8 மீனவரில் ஒருவரின் சடலம் ஒதுங்கியது

வல்வெட்டித்துறை, ஜன-6

பருத்தித்துறை சக்கோட்டை கடற்பகுதியில் நேற்று முன்தினம் கடற்படையினர் நடத்திய வெறியாட்டத்தில் காணாமற் போன 8 மீனவர்களில் ஒருவரின் சடலம் நேற்று மணற்காட்டுப் கடற்கரைப் பகுதியில் கரை ஒதுங்கியது.

கடற்படையினரின் தாக்குதலில் மீனவர் ஒருவர் பலியானது குறித்தும் எட்டு மீனவர் காணாமற் போனது பற்றியும் நேற்றைய உதயனில் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

காணாமற்போன எட்டுப் பேரில் தேவதிரவியம் ஜெயரட்ணம் (வயது 22) என்பவரே நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

சடலத்தில் வயிற்றுப் பகுதியிலும் கால்களிலும் பெரும் காயங்கள் காணப்பட்டன.

எஞ்சிய ஏழு மீனவரையும் தேடும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். (உ-87-155-3)

## இரு போராளிகள் நேற்று வெடி விபத்தில் வீரச்சாவு

யாழ். மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற எதிர்பாராத வெடி விபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரச்சாவு அடைந்தனர்.

கப்டன் மதி (பரஞ்சோதி கணேசமூர்த்தி—காரைநகர்), லெப்டினன்ட் தேவன் (செல்லத்துரை சுந்தரலிங்கம்—தாளையடி) ஆகிய இரு போராளிகளுமே வீரச்சாவு அடைந்தவர்கள் ஆவர்.

இம்மாவீரர்களது வித்துடல்கள் இன்று காலை 10 மணிக்கு அவர்களது இல்லங்களில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு—

கப்டன் மதியின் வித்துடல் யாழ். மடம் வீதியில் (முலவைச்சந்தி) உள்ள ஜெகன் படிப்பகத்திலும் —

லெப். தேவனின் வித்துடல் பருத்தித்துறை பஸ் நிலையத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அஞ்சலி கூட்டங்களைத் தொடர்ந்து இறுதி இராணுவ மரியாதைகளுடன் கப்டன் மதியின் வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும், லெப். தேவனின் வித்துடல் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலும் புனித விதைகுழிகளில் விதைக்கப்படும். (ஒ-3)

### எலும்புக்கூடுகள் மீட்பின் எதிரொலி

## சந்திரிகா, எம். பிக்களுக்கு கொலைப் பயமுறுத்தல்!

கொழும்பு, ஜன. 6

சூரியகந்த புதைகுழி விவகாரத்தை அம்பலப்படுத்தியமைக்காக தமக்கும் மற்றும் சில சுதந்திரக் கட்சி எம்.பிக்களுக்கும் தொலைபேசி மூலம் அடிக்கடி கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்திருக்கிறார்.

எஸ். பி. திஸநாயக்கா, டி. எம். ஜயரத்ன, மங்கள சமரவீர போன்ற எம்.பிக்களுக்கே கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறதாம்.

## அரச பிரமுகர்கள் வீடுகளின் பின்னாலும் புதை குழிகள!

### சிறிமா, சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 6

அரசின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் அமைச்சர்கள், அவர்களிலும் உயர்ந்த தலைவர்கள் போன்றோரின் வீடுகளின் பின்புறங்களிலும், காணிகளிலும் சூரியகந்தவில் காணப்பட்டது போன்ற புதைகுழிகள் இருக்கின்றன என்பதற்கு நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், அவரது மகளான சந்திரிகா குமாரணதுங்கவும் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறியதாவது:-

சூரியகந்த புதைகுழி பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் பிரசுரமாவதைத் தடுக்கும் அரச பிரமுகர்கள், புதைகுழி குறித்து நீதியான விசாரணை நடத்துவார்கள் என நம்ப முடியுமா? எனவே இப்படுகொலைச் சம்பவம் குறித்து சர்வதேச மனித அமைப்புகளுடன் இணைந்தே பக்க சார்பற்ற விசாரணை நடத்தப்படவேண்டும்.

ஓய்வுபெற்ற நீதியரசர்களையும், அரசியல் கட்சிகளையும், வெளிநாட்டு மனித உரிமை நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், வெளிநாட்டுக் கல்விமான்களையும் உள்ளடக்கிய ஆணைக்குழு ஒன்றை நியமித்து விசாரணை நடத்தவேண்டும்

கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் சர்வதேச நிபுணர்களைக் கொண்டு அறிவியல் ரீதியாக பரிசோதனை செய்து உண்மைகளைக் கண்டுபிடிக்கவேண்டும்— என்று தெரிவித்தனர். (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

8X4 ஒரு நூல் தகடு விற்பனைக்கு உள்ளது தொடர்பு கொள்ளவும். இ. தவகோபால் 525/2, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6927)

## தேவை

யாழ். மணிக்கூட்டு வீதி, அரசடி விநாயகர் ஆலயத்திற்கு பலவேலைகளும் செய்யக் கூடிய ஓர்ஆள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். காரியதரிசியுடன் உடனே தொடர்பு கொள்ளவும். பரிபாலன சபை, 03, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (28780)

## மணப்பெண் தேவை

யாழ். இந்து பட்டதாரி ஆசிரியர், வயது 38, ரேவதி 3, செவ்வாய் 8இல் கிரகபாவம் 44, மணமகள் ஆசிரியை, அழகு, நற்பண்பு, வயது 32க்குள் விரும்பத்தக்கது. சாதகத்துடன் முழு விவரம் அறியத் தரவும் இல. 583, மே/பா, உதயன் யாழ்ப்பாணம். (28743)

## மணமகள் தேவை

கிறிஸ்தவ மதம், 43 வயது குடிப்பழக்கமற்ற அரசாங்க உத்தியோகத்தருக்கு 36 வயதிற்குட்பட்ட மணப்பெண் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல: 584, மே/பா, உதயன் யாழ்ப்பாணம். (28775)

## உடன் தேவை

சகல விதமான எலெக்ரோனிக் கைக்கடிகாரங்கள் (குவாட்ஸ்) மேசை, சுவர் மணிக்கூடுகள் திருத்துவதில் அனுபவம் உள்ள திருத்துனர் தேவை. நேரில் தொடர்பு கொள்க: டில்கா வாச் வேக்ஸ் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் அருகில்) (6892)

## திருமண சேவை

உள்ளூர், வெளியூர் மணமக்கள் தேவையா? தொடர்பு கொள்ளவும். அம்பாள் திருமண சேவை. இல. 22, ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (28773)

## இடமாற்றம்

வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியிலுள்ள ஞானக்குழந்தை இல்லம் பாலர் பாடசாலை அண்மையிலுள்ள காளி கோயில் ஐயர் இல்லத்தில் வெள்ளிக்கிழமை 07-01-94 காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறும் என்பதனை அறியத் தருகிறோம். பாலர் கல்விக் கழகம். (28772)

## கல்வி

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவில் இருந்து Distinction பெறுபேறடைவதற்கு குறைந்த காலங்களில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6880)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப் பாருங்கள்! ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம், சாமுத்திரிகாலட்சணம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன் பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு (28764)

## இலவசம்

பண வசதியற்ற 24 சைவ பாலர்களுக்கு தைப்பூசத் தினத்தன்று காலை 10 மணிக்கு 179, பிறவுண் வீதியில் இலவச பாலர் பாடசாலை ஆரம்பமாகவுள்ளது. சேர விரும்புவோர் சுய விலாசத்துடன் முத்திரையிட்ட அஞ்சல் உறையுடன் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். பாலர் கல்விக் கழகம், 49/5, யாழ். றோட், யாழ்ப்பாணம். (28785)

## சார்ஜர் தேவை

விற்க வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும். யுனிரெக் பொறியியல் நிறுவனம், வெலிங்டன் சந்தி. (28778)

---

**VIBGYOR ACADEMY**

குளப்பிட்டி வீதி
(மில் அருகில்)
ஆனைக்கோட்டை.

ஆண்டு 4 முதல்
O/L வரை
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்

**6-01-1994**
(மாலை 3 மணி)

விஞ்ஞானம்:- J.J. கொலின்ஸ்
கணிதம்:- B.P. பாஸ்கரன், ஜெயக்குமார், ஜெயா
தமிழ்:- தங்கவேல்
சமூகக்கல்வி:- கோபி
வர்த்தகம்:- தர்மராஜன்
ஆங்கிலம்:- C. சத்தியமூர்த்தி, S. ஜெயானந்தன்

(சி/6925)

---

**NEW 'A' LEVEL CENTRE**

STATION ROAD, JAFFNA.

ஆண்டு 11, 10, 9
வகுப்புகள்
ஆரம்பம்:
**07-01-1994**

★ யாழ் நகர் பிரபல ஆசிரியர் குழு

அனுமதிகள் அன்று 3-00 பிற்பகல் வழங்கப்படும். (சி-6883)

---

**SPECIAL ENGLISH CLASSES**

★ A/L, O/L பரீட்சை முடித்தவர்களுக்குரியது.
★ Spoken English with Grammar (ஆரம்ப கற்கை நெறி)
★ G. C. E. (O/L) Dec. 94
(அலகு ரீதியாக ஆண்டு 8, 9, 10, 11 பாடத் திட்டங்கள் ஆரம்பத்திலிருந்து போதிக்கப்படும்)
★ Year 10, 9, 8, 7, 6

ஆரம்பம்: **06 – 01 – 1994**
(வியாழன்)

விபரங்களுக்கு:

**NEW ENGLISH ACADEMY**

82, பருத்தித்துறை வீதி.
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
[சி-7007]

---

# மனைப் பொருளியலும் கைத்திறனும்

மகளிருக்கான

## டிப்ளோமா பயிற்சி நெறி

- ○ கேக் ஐசிங்
- ○ உணவு தயாரித்தல்
- ○ உடை தயாரித்தல்
- ○ கை வேலை
- ○ பூ வேலை

**பயிற்சிக் காலம் 6 மாதங்கள்**

✻ மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புகளும் நடைபெறும்
✻ பயிற்சியின் முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்
✻ கிழமை நாள் பிரிவினருக்கான பயிற்சி திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை நடைபெறும்.
✻ சனி, ஞாயிறு பிரிவினருக்கான பயிற்சிகள் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு நேரில் வரவும்:

புதிய கிழமை நாள் பயிற்சிகள் ஆரம்பம்: **12-01-94**
புதிய சனி-ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம்: **15-01-94**

# கலாலயா

(தொழிற் பயிற்சியகம்)
விக்டோரியா வீதி, (ஆஸ்பத்திரியின் பின்புறம்) யாழ். நகர்.
[சி-6895]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L DAY CLASSES**
(8-00 – 2-00)

ஆரம்பம்: **10 - 01 - 1994**

★ பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[சி-7001]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**கல்வியாண்டு - 1994**

**O/L**
**EVENING CLASSES** (3-15 — 6-00)
**SAT. - SUN CLASSES** (8-00 — 1-00)

ஆண்டு - 10, 9, 8, 7, 6

திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | :- | திரு. J.R. சூரி |
| கணிதம் | :- | திரு. ஜெகன் |
| சமூகக்கல்வி | :- | திரு. கோபி |
| ஆங்கிலம் | :- | திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | :- | திரு. சிவா, திருப்பதி |
| வர்த்தகம் | :- | திரு. கருணாகரன் |
| சமயம் | :- | திரு. கஙகா, சங்கர் |

ஆரம்பம்: **06-01-1994** (வியாழன்)
மாலை 3-15 மணி


★ அனுமதிகளை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

(சி-6868)

---

# மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

(06 – 01 – 1994)



பூவுலகில்: 19 – 07 – 1961
விண்ணுலகில்: 08 – 01 – 1991

## அமரர் ஆசைப்பிள்ளை சந்திரநாதன்

(Sub-Inspector of works N. H. D. A., Jaffna.)

பிரிவால் துயருறும்;
பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள், அண்ணிமார், பெறாமக்கள், மருமக்கள்.

50/3, கலைமகள் வீதி,
அரியாலை.
(28766)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு: 15 – 04 – 1925
இறப்பு: 05 – 12 – 1993

## அமரர் மருதப்பா பாலசிங்கம்

(இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகஸ்த்தர்)

எம்மையெல்லாம் ஆறாத் துயரிலாழ்த்தி மீளாத் துயில் கொண்ட அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு, ஆறுதலளித்த அனைவருக்கும் அஞ்சலிகள். அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பல்வேறு வழிகளிலும் உதவியும், ஒத்தாசையும் வழங்கியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக.

இன்று 06-01-1994 இல் நடைபெறும் 31ஆம் நாள் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/7005)

---

வண்ணை

# வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்

மேற்படி தேவஸ்தானத்திற்கு சொந்தமான காணிகள், வீடுகள், வயல்கள், கடைகள், தோட்டங்கள் போன்றவற்றில் குத்தகையாளர்களாக / வாடகையாளர்களாக இருப்பவர்கள் தங்கள் செலுத்துமதிகளை எதிர்வரும் 1994-1-30 ஆம் திகதிக்கு முன்பதாக செலுத்துவதோடு சகல குத்தகை ஒப்பந்தங்களையும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் அத்துடன் எனது எழுத்து மூலமான அனுமதி இல்லாமல் வேறு எவருக்கும் கைமாற்றம் செய்வது செல்லுபடியாகாது என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

வை. கந்தப்பச் செட்டியார்,
தர்மகர்த்தா

(28788)

---

# ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயம்

உயரப்புலம், ஆனைக்கோட்டை.

## குருக்கள் தேவை

மேற்படி ஆலய நித்திய, நைமித்திக பூஜா கருமங்களை திறம்பட நடத்த ஒரு குருக்கள் தேவை. அவர் குடும்பப் பொறுப்புள்ளவராகவும், கோவிலின் வீட்டில் நிரந்தாமாக குடியிருக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

★ அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்கள் இருப்பின் பிரதி இணைக்கவும்.
★ சம்பள விவரம் நேரில் பேசிக்கொள்ளலாம்.
★ விண்ணப்ப முடிவு திகதி: **15 – 01 – 1994.**

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:-

செயலாளர்.
வீ. இராமச்சந்திரா,
கேணியடி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(28790)

---

# நாவலர் கல்விக் கழகம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**கல்வி ஆண்டு-1994**

**ஆண்டு 1 முதல் O/L வரை**

ஆரம்பம்: **09 - 01 - 1994**
ஞாயிறு காலை 7-30 மணி

திறமை வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையுடன்.

✻ விஞ்ஞானம்
T. S. S. மோகன்
T. S. குணாளன்
P. றெல்க்கன்

✻ கணிதம்
S. கிருபாகரன்
T. S. குணாளன்
செல்வி ரஞ்சி
செல்வி வேணி

✻ தமிழ்
புவனேந்திரன்
குழந்தைவேலு
செல்வி சிவரூபி

✻ சமூகக்கல்வி
K. S. முத்துலிங்கம்
செல்வி ரூபி

✻ ஆங்கிலம்
V. மண்டலேஸ்வரன்
K. சிவராஜா

✻ வர்த்தகம்
K. சத்தியபாலன்

✻ சமயம்
செல்வி ரூபி

★ மாதாந்த பரீட்சையுடன் வகுப்புகள் நடத்தப்படும்
★ புதிய அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும்

[சி-6926]

---

# பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

கொக்குவில்.

**1994 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புகள்**

ஆரம்பம்: **06 - 01 - 1994**
வியாழன் 3 மணி

ஆண்டு 4 முதல் 11 வரை

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. இரா. அருட்செல்வம்<br>திரு. கருணாகரன்<br>திரு. விவேகானந்தன் |
| விஞ்ஞானம் | — | திரு. பாலா<br>திரு. இரா. அருட்செல்வம்<br>திரு. ராஜகோபால் |
| தமிழ் | — | திரு. பொன்னுச்சாமி |
| சமயம் | — | திரு. சிவசிதம்பரம் |
| ஆங்கிலம் | — | திரு. சத்தியமூர்த்தி<br>திரு. ஜெயனொளிபவன் |
| சமூகக்கல்வி | — | திரு. கணேஸ்<br>திரு. ராஜேந்திரன் |
| வர்த்தகம் | — | திரு. மகேஸ் |

[28792]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
191/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பதம் பார்க்கும் தேர்தல்கள்!

ஸ்ரீலங்காவின் தற்போதைய அரசமைப்பின் பிரகாரம், ஜனாதிபதியே நாட்டின் தலைவர். ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறும் என்று நம்பப்படுகிறது. அதனாலேயே இவ்வருடம் தேர்தல் ஆண்டாகக் கருதப்படுகிறது. அதனைக் கருத்தில் கொண்டே அரசின் சகல நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. எதிரணி அரசியல் தலைவர்களும் தேர்தலை மனதில் வைத்தே பணியாற்ற ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பதம் பார்ப்பதுபோல, தெற்கில் மாகாணசபைத் தேர்தல் மார்ச் மாதத்தில் நடக்கப் போகிறது. கிழக்கிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை அநேகமாக அதே காலப் பகுதியில் நடத்த அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

இரண்டு தேர்தல்களும் இரு வெவ்வேறு உள்நோக்கங்களைக் கொண்டவை. எனினும், அரசு தனது பலத்தை உரைத்துப் பார்ப்பதற்காக வேண்டுமென்றே நடத்தும் தேர்தல்கள் என்ற ஒத்த தன்மை உடையவை.

தெற்கு மாகாண சபைத் தேர்தலை எடுத்துக் கொண்டால் அது அரசினால் முழுக்க முழுக்கச் செயற்கையாகத் தோற்றுவிக்கப்பட்டதாகும். தென்மாகாண சபைக்கு கடந்த மே மாதம் நடைபெற்ற தேர்தலில் அங்கு ஆட்சி அமைக்க ஆளுங்கட்சிக்கு அமோக பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனினும் ஐ.தே. கட்சியே ஆட்சியைப் பாய்ந்து பிடித்துக் கொண்டது. நீதிமன்றம் அது தவறானது என்று தீர்ப்பளித்தது. எதிரணிக்காரர் முதலமைச்சர் பதவியேற்றார்.

நீதிமன்றத் தீர்ப்பை எவ்வாறேனும் செல்லாக்காசாக்கிவிட வேண்டும் என்ற பழிவாங்கும் நோக்குடன் ஆளுங்கட்சி கடந்த மாதம் அரசியல் அடாவடித்தனங்களில் இறங்கியது. எதிரணிக்கு ஆதரவான உறுப்பினர் ஒருவரைக் கடத்தி விலைக்கு வாங்க முயற்சித்தது. அது தவறிப்போகவே, திட்டமிட்ட ரீதியில் சட்டத்தைத் தனக்காக வளைத்து, மாகாண சபையை அரசு கலைத்தது.

தேர்தல் மூலம் அரசாங்கக் கட்சிக்கு தெற்கில் உள்ள ஆதரவை, வாக்குப் பலத்தை எடை போடலாம் என்று நினைத்தே தென்மாகாண சபைக்கு செயற்கையான தேர்தல் ஒன்று நடத்தப்படுகிறது.

கிழக்குத் தேர்தலைப் பொறுத்தவரையில் அங்கு தேர்தல் நடத்துவதன் மூலம் அந்தப் பிரதேசம் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், தமிழர்களுக்குப் பெரிதாகப் பிரச்சினை ஒன்றும் இல்லை என்றும் வெளி உலகத்துக்குக் காட்டுவதே நோக்கம்.

கிழக்கில் தேர்தல் ஒன்றை நடத்தி முடிக்க இயலுமானால் யுத்தத்தில் தங்களால் வெல்ல முடியும் என்ற ஒரு கோட்பாடும் இராணுவ வட்டாரங்களில் நிலவுகிறது. ஆகையால் கிழக்குத் தேர்தலும் அரசாங்கத்தின், ஆயுதப் படைகளின் பலத்தை இருப்பு எடுக்கும் ஏற்பாடே.

அதனாலேயே, கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தபோதிலும், இம்முறை தாம் தேர்தலை ஒத்திவைக்க அனுமதி அளிக்கப்போவதில்லை என்று ஜனாதிபதி விடாப்பிடியாக நிற்கிறார்.

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நடத்தி அரசு தமிழ் மக்களை தினமும் கொன்று வருகிறது. தெற்கில் சட்டங்களை துஷ்பிரயோகம் செய்து சிங்கள மக்கள் மீது அரசியல் அடாவடித்தனத்தை, அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இப்படி ஒரு நிலையில் தேர்தல்கள் நடைபெறுமாயின், அரசு கிழக்கிலும் தெற்கிலும் தோல்வியுறுவது நிச்சயம். ஆனால் இரண்டு பிரதேசங்களிலுமே தேர்தல் நடைபெறுமா என்பது சந்தேகத்துக்கு உரியதாகும். இரத்தினபுரி— சூரியகாந்தி எலும்புக்கூடு சம்பவத்தின் விளைவாக தெற்கில் அரசியல் சூடு பிடிப்பது நோக்கற்பாலது.

# விசேட ராணுவ, அதிரடி படையினால்மட்டுமே விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள முடியும்

## பயிற்சிபெற்ற காலாட் படையினர் போரிடத் தயங்குகின்றனர்

கொழும்பு, ஜன 6

இன்று விடுதலைப் புலிகளை யுத்தத்தில் நெருங்கிச் சென்று அவர்களுடன் மோதுவதற்கு விசேட இராணுவப் படைகளினாலும் விசேட அதிரடிப் படைகளினாலும் மட்டுமே முடியும். அதிகபட்ச உயிரிழப்புகளினால் ஏற்பட்ட அச்சம் காரணமாக சண்டைப் பயிற்சி பெற்ற காலாட்படையினர் அவர்களுடன் போரிடுவதற்குத் தயங்குகின்றனர்.

சண்டே ஐலண்ட் 2-1-94 வார இதழில் 'ராவணா' எழுதிய அரசியல் கட்டுரையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் ''யுத்தங்களின் ஆண்டைச் சந்திக்கும் தந்திரோபாயம்'' என்ற தலைப்பில் எழுதப்பட்ட அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

**இன்னும் பாடம் படிக்கவில்லை**

விடுதலைப் புலிகளுடன் பழைய தந்திரோபாயங்களையும் உத்திகளையும் கொண்டு படையினர் சண்டையிடுவதில் உள்ள பிரயோசனமற்ற தன்மை 1994ஆம் ஆண்டு வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படும்.

இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களும் பாதுகாப்புத்துறையை நிர்வகிப்பவர்களும் இன்னும் பாடம் படிக்கவில்லை என்பதையே 1993 நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

அரசியல் தலைமைத்துவமும் பாதுகாப்புத்துறையும் இன்னும் கடினமாக படிக்க வேண்டியுள்ளது என்பதை நடப்பு நிகழ்வுகள் கோடி காட்டுகின்றன.

உளரீதியாக யுத்தப் பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகள் போன்று இலங்கைப் படையினரும் உடல், உளரீதியாக விடுதலைப் புலிகளை எதிர்த்துச் சண்டையிட தயாராக வேண்டும். விடுதலைப் புலிகளின் போர்முறையான மரபு வழியற்ற போர்முறையில் அரச படையினருக்கு விசேட பயிற்சி அளிக்க வேண்டும்.

இராணுவ பாடவிதானம் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலை எதிர் கொள்ளக் கூடியதாக போதுமான அளவு மாற்றப்படவில்லை. அதற்கான காலம் இன்னும் பிறக்கவில்லை.

படையினரின் மனோதிடத்தை அதிகரிக்கவும் இதே போன்ற முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாதுகாப்பு அதிகார பீடத்தில் சில கட்டமைப்பு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பிரதேச தளபதிகள் சிவப்பு நாடா கட்டுப்பாடின்றி தத்தமது பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இம்மாற்றம் அத்தியாவசியம் ஆகும்.

**அரசின் தலைவிதி புலிகள் கையில்**

1994 தேர்தல் ஆண்டு.

விடுதலைப் புலிகள் மற்றும் அரச படைகள் ஆகியோரின் சாதனைகள் இவ்வாண்டு அரசியலின் தலைவிதியை நிர்ணயிக்கும்.

பயமுறுத்தலைச் சமாளிக்கக்கூடிய விதத்தில் இராணுவத்தை பலமுள்ளதாக்க பாதுகாப்பு செயலாளர் வனசிங்க சில திட்டங்களை தயாரித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தோன்றி 1994 உடன் 20 ஆண்டுகளாகின்றன. திரு. பிரபாகரனும் தமது 40 ஆவது பிறந்த தினத்தை இந்த ஆண்டு கொண்டாடுகிறார்.

சில நிலைவரங்கள் உருவாக்கப்பட்டால் ஒழிய பேச்சுவார்த்தை மூலமான தீர்வு எதற்கும் விடுதலைப் புலிகள் ஒருபோதும் இணங்க மாட்டார்கள்.

இராணுவ மற்றும் அரசியல் ரீதியான சில வழிகளைக் கையாண்டு இந்த நிலைவரங்களை அரசாங்கம்தான் உருவாக்கவேண்டும்.

**தமிழரின் மனதை வெல்ல வேண்டும்**

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவது அத்தியாவசியமானது. இதற்கு முன்னோடியாக வடக்கு-கிழக்கு தமிழர்களின் மனதை வெல்லக்கூடிய அரசியல் பிரசாரத்தில் அரசாங்கம் இறங்க வேண்டும்.

இந்த தந்திரோபாயத்தின் முக்கிய அம்சம் தமிழர்களின் சட்டபூர்வமான உரிமைகளை அதிகாரப்பகிர்வு செய்வதாகும்.

இப்படி கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## வடக்கு-கிழக்கு யுத்தத்தால் 10 லட்சம் பேர் அகதிகள்

### லண்டன் சஞ்சிகை தகவல்

கொழும்பு, ஜன. 6

வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக பத்துலட்சம் பேர் அகதிகளாகி உள்ளனர் என்று லண்டன் ஆங்கில சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

யாழ். குடாவில் இருந்து சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் வரை இடம்பெயர்ந்து உள்ளனர். இவர்களில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். 4 லட்சம் தமிழர்கள் ஐரோப்பா மற்றும் கனடா நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

ஆனால் இந்த யுத்தத்தில் 5 லட்சத்து 14 ஆயிரம் பேர் தான் அகதிகளாகியுள்ளனர் என்று இலங்கை அரசு கூறுகிறது.

கிழக்குப்பகுதி முகாம்களில் உள்ள அகதிகளே மீண்டும் அகதிகளாகியுள்ளனர் என்றும் லண்டனில் இருந்து வெளிவரும் இகொனொமிக் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## கரவெட்டி ஜனசக்தித் திட்டம்: அரச அதிபர் பார்வையிட்டார்

வடமராட்சி, ஜன. 6

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஜனசக்தி கருவேலைத் திட்டங்களை யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கடந்த திங்களன்று நேரடியாகப் பார்வையிட்டார்.

யாழ். அரச அதிபருடன் யாழ் மாவட்ட பிரதி ஆணையாளர் து. வைத்திலிங்கம், யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன் ஆகியோரும் — யாழ். செயலகத்தைச் சேர்ந்த மற்றும் சில அதிகாரிகளும் வந்திருந்தனர்.

கரவெட்டிப் பிரிவில் ஜனசக்தி கருத்திட்டத்தின் கீழ் 35 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவற்றுள் கரணவாய் மத்தி விழுந்த ஆலடி வீதி, கரணவாய் அண்ணாசிலையடி வீதி, கரணவாய் தெற்கு, கரணவாய் கிழக்கு கோழிப் பண்ணைகள், மத்தொனி சந்தை, கரவெட்டி தெற்கு ஆடு வளர்ப்புத் திட்டம், கரவெட்டி மத்தி சோனப்பு நீர்த்தேக்கம், துன்னாலை மேற்கு தாமரைக்குளம் ஆகிய திட்டங்களை யாழ். அரசாங்க அதிபரும் அவரது குழுவினரும் பார்வையிட்டனர்.

இவர்களை கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன் அழைத்துச் சென்றார்.

திங்கள் முழுநாளும் கரவெட்டி பிரதேசத்தில் சுற்றுப் பயணம் செய்த யாழ். அரசாங்க அதிபர் பிற்பகலில் ஜனசக்தி கருத்திட்டத்தின் கீழ் நெல்லியடியில் தமிழ் ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தார்.

கரவெட்டி பிரதேச செயலர் திரு செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் திரு. கா. மாணிக்கவாசகர், திட்டமிடல் பணிப்பாளர் திரு வி. செ. சுவாமிநாதன், யாழ். மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் திரு. செ. இளையவன் ஆகியோர் உரையாற்றினார்கள். (இ-173)

# பற்றறிகள் கடத்தியது யார்? அதிகாரி சம்பந்தப்பட்டாரா?

## செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு விளக்கம்

கொழும்பு, ஜன. 6

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு டிரான்சிஸ்டர் பற்றறிகளைக் கடத்த முயற்சித்ததாக செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரி ஒருவர் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட இருப்பதாகக் கூறி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் தென் இலங்கையில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனை அடுத்து யாழ். குடா நாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்லும் கப்பல்களுக்கும் —

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பொருள்களை கொண்டு செல்லும் வாகனங்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் நடைமுறையை மறுபரிசீலனை செய்யப் போவதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அறிவித்துள்ளது!

பற்றறி கடத்தல் குற்றச்சாட்டு குறித்து செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு கொழும்பில் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளாக அரசினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்களில், அரசாங்கம் ஏற்றிவிடும் பொருள்களை முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் அரச அதிபர்களிடம் கொண்டு சென்று ஒப்படைக்கும் பணியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பை வழங்கி வருகிறது.

அதேபோன்று யாழ். மாவட்டத்திற்கு கப்பல்களில் பொருள்கள் அனுப்பப்படும் போதும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு பாதுகாப்பு வழங்கி வருகிறது.

**வவுனியா சோதனை முகாமில்**

கடந்த டிசம்பர் 23 ஆம் திகதி வடபகுதிக்குக் கொண்டு செல்வதற்கென அரசினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டு, பொருள்கள் ஏற்றப்பட்ட 25 டிரக் வண்டிகள் படையினரின் சோதனைக்காக வவுனியா ரம்யா ஹவுஸ் சோதனைச் சாவடிக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் கொண்டு வரப்பட்டன. டிரக் வண்டித் தொடரின் ஆரம்பத்தில் முன்னால் சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வாகனத்தை இலங்கையர் ஒருவர் ஓட்டிச் சென்றார்.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு பிரதிநிதியான பேனாட் கிறனென்பெல்டர் அந்த வாகனத்தில் அமர்ந்திருந்தார்.

மற்றொரு இலங்கையரால் ஓட்டிச் செல்லப்பட்ட செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வாகனம் டிரக் வண்டித் தொடரின் பின்னால் வந்து கொண்டிருந்தது.

இராணுவத்தினர் தமக்குக் கிடைத்த தகவலின் பேரில் வண்டித் தொடரின் பின்னால் வந்த அந்த வாகனத்திற்குச் சென்று அதனைத் திறந்து காட்டும்படி இலங்கையரான சாரதியைக் கேட்டனர்.

பின் பகுதியில் உள்ள வலது கதவின் உட்பகுதியைத் திறந்த போது அதற்குள் 432 பற்றறிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இராணுவத்தினர் முன்னால் நின்ற வாகனத்தில் இருந்த திரு. [illegible] கிறனென்பெல்டரை அழைத்து நிலைமையை விளங்கப்படுத்தி சம்பந்தப்பட்ட வாகனத்தையும், அதன் சாரதியையும் விசாரணைக்காக வவுனியாவிலுள்ள சென். ஜோசேப் முகாமில் ஒப்படைத்து விடுமாறு கேட்டனர். அதற்கு கிறனென் பெல்டர் இணங்கினார்.

ஆகவே இதே போன்று மீண்டும் ஒரு சம்பவம் இடம்பெறாமல் தடுக்கும் பொருட்டு இராணுவத்தினர் அது தொடர்பாக பூரண விசாரணை நடத்த வேண்டும் என்பதில் செஞ்சிலுவைச் சங்க சர்வசேக் குழு அக்கறை கொண்டுள்ளது.

கிறனென்பெல்டர் எந்த சந்தர்ப்பத்திலும் தடுத்து வைக்கப்படவோ, விசாரிக்கப்படவோ, சந்தேசிக்கப்படவோ இல்லை.

கிறனென்பெல்டர் தொடர்ந்து வாகன அணியுடன் முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் செல்லுமுன் அவரது வாகனமும் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டு அதில் எதுவித கடத்தல் பொருள்களும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

கிறனென்பெல்டர் மீண்டும் வெற்று வாகனங்களுடன் கடந்த 25 ஆம் திகதி கொழும்பு திரும்பும் போதும் அதே சோதனைச் சாவடியைத் தாண்டி வந்தார். அவருக்கு எதிராக எந்த அதிகாரியும் எமக்கு எந்தவித முறைப்பாடும் தெரிவிக்கவில்லை.

கிறனென்பெல்டர் தொடர்ந்தும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான அதிகாரியாக விளங்குகிறார்.

(இந்த அறிக்கையின் சாராம்சம் [illegible] வெளிவந்தது) (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கணக்காளர் பரீட்சை ஒத்திவைப்பு

கடந்த 20 ஆம் திகதி நடைபெற இருந்த கணக்காளர் II தரத்திற்கான திறந்த மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. என்றும் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனப் பரீட்சை ஆணையாளர் யாழ் செயலகத்திற்கு தகவல் அனுப்பியுள்ளார்.

எற்கனவே அனுப்பப்பட்டுள்ள அனுமதி அட்டைகள் செல்லுபடியாகும் எனவும் அறிவிக்கப்பட்டது.

## எம்பிலிப்பிட்டிய சம்பவம்:

# கொழும்பு பத்திரிகைகள் மீது பிரதமர் ரணில் அழுத்தம்

கொழும்பு, ஜன. 6

இரத்தினபுரி மாவட்டம் எம்பிலிப்பிட்டிய காட்டுப் பகுதியில்—சூரியகந்தவில்— புதைகுழிகளிருந்து எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டது பற்றிய செய்திகளையும் படங்களையும் கொழும்புப் பத்திரிகைகள் முதற் பக்கத்தில் பிரசுரிக்காமல் தடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாமே நேரில் பத்திரிகை அலுவலகங்களிக்குச் சென்று பத்திரிகைகள் மீது அழுத்தத்தைப் பிரயோகித்தார்.

ஸ்ரீ.ல.சு.கவைச் சேர்ந்த மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க இக்குற்றச்சாட்டை வெளியிட்டார்.

அரச தரப்பில் அழுத்தம் பிரயோகிக்கப்படுவதற்கு முன்னரே பல பத்திரிகை அலுவலகங்களில் மாகாணப் பதிப்புகள் (வெளியூர்ப் பதிப்புகள்) அச்சாகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

''எம்பிலிப்பிட்டிய இரகசியங்கள் சனியன்று வெளிவரும்'' என்ற பெரும் தலைப்புடன் எதிரணி எம்பிமார் இருவர் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட—பிக்குகள் அணியும்— அங்கியைப் பரிசோதிக்கும் படம் 'திவயின' பத்திரிகையின் வெளியூர்ப் பதிப்பில் முன்பக்கத்தில் பெரிதாக பிரசுரமாகியிருந்தது ஆனால் கொழும்புப் பதிப்பில் முன்பக்கத்தில் இந்தப் படமோ செய்தியோ இருக்கவில்லை.

''ஐலண்ட்'' பத்திரிகையிலும் இதே நிலை தான்.

'லங்காதீப' பத்திரிகையின் வெளியூர்ப் பதிப்பில் பெரும் தலைப்பாக பிரசுரமான இச்செய்தி கொழும்புப் பதிப்பில் சிறியதாக இடம்பெற்றிருந்தது: புகைப்படம் பிரசுரமாகவில்லை.

அரச தொடர்பு சாதனங்களோ, அரசு சார்புப் பத்திரிகைகளோ இச்செய்தி குறித்து மூச்சுக்கூட விடவில்லை. (உ-5-6)

## லங்கா சிமெந்து ஊழியருக்கு நாளை சம்பளம்

யாழ்ப்பாணம், ஜன. 6

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கான நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் நாளை வெள்ளிக்கிழமை கன்னாகம் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## அதிகபுள்ளிகளைப் பெற்று..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**வேலணை**

பரமானந்தன் சாயிநேசன் — (புங்குடுதீவு ம. வி.) — 4டி, 2சி, 2எஸ் — 540

பரஞ்சோதி குணதீபன் — (வேலணை சேர்வை. து. ம. வி) — 3டி, 4சி, 1எஸ் — 526

**கரவெட்டி**

சர்மிளா தவேஸ்வரன் — (உடுப்பிட்டி மகளிர்) — 6டி, 2சி — 650

சிராந்திலி ஜெகநாதன் — (உடுப்பிட்டி மகளிர்) — 8டி — 646

**பருத்தித்துறை**

கந்தசாமி யோகநாதன் — (ஹாட்லி) — 8டி, — 657

சிவம் ராஜாராம் (ஹாட்லி) 7டி, 2சி, — 649

**மருதங்கேணி**

சிவமலர் வேலுப்பிள்ளை— (ஆழியவளை சி. சி த. க. பா.) — 4டி, 2சி, 2எஸ் — 517

துரைசிங்கம் விஜயபாஸ்கர் — (ஆழியவளை சி சி. த. க. பா.) — 3டி, 3சி, 2எப் — 473

**சாவகச்சேரி**

சாமுவேல் துஷ்யந்தன் (சாவகச்சேரி இந்து) — 7டி, 1சி — 662

சுபாஜினி ராசதுரை — (சாவகச்சேரி இந்து — 7டி, 1சி — 643

**உடுவில்**

ரஜித்தா காந்தரட்ணம் — (உடுவில் மகளிர்) — 7டி, 1சி — 654

சுதாகினி புலேந்திரன்— (உடுவில் மகளிர்) — 6டி, 2சி — 632

**சங்கானை**

நிலாணி இராமச்சந்திரன் — (யாழ்ப்பாணக் கல்லூரி) 7டி, 1சி — 642

செல்வராஜா தவேந்திரன் — (யாழ்ப்பாணக் கல்லூரி) — 5டி, 3சி — 638

**தேசிய மட்டத்தில் பரிசு பெறுவோர்**

சிவதர்சினி சிவசுப்பிரமணியம் — (வேம்படி மகளிர்) — 8டி — 712

ஆறுமுகம் தேவராஜா [illegible]ஸ்வி தேவசுதன் — (ஹாட்லி) 8டி — 702

குகாஜினி தில்லைநாதன்— (வேம்படி மகளிர்) —8டி—693

சுந்தரலிங்கம் காந்தரூபன் — (பரியோவான்) — 8டி — 691

சுதந்திரபாலன்கௌரிசங்கர் — (யாழ். இந்து) 7டி, 1சி — 682

சிவசுப்பிரமணியம் சிவசாம்பவன் (யாழ் இந்து) 7டி, 1சி — 673

நாகசந்திரா கீர்த்தனன் — (பரியோவான்) — 7டி, 1சி — 673

பாலச்சந்திரன் பாலமுரளி (பரியோவான்) —7டி, 1சி — 669

ஷவாணி திருஞானசம்பந்தன்— சுண்டிக்குளி மகளிர்)— 8டி — 671

கௌரி நவரத்தினசோதி — (மெதடிஸ்த பெண்கள்— 7டி, 1சி — 666

**கோட்ட மட்டத்தில் பரிசு பெறுவோர்**

**நல்லூர்**

உலகப்பிரகாசம் ஜெயதீபன் — (யாழ். இந்து) — 8டி — 657

மகாலிங்கம் அறிவழகன் — (யாழ். இந்து) — 7டி, 1சி — 653

**யாழ்ப்பாணம்**

பாமினி தர்மலிங்கம் — (சுண்டிக்குளி மகளிர்)— 8டி — 663

ஜொஷணி திருவிளங்கம் — (சுண்டிக்குளி மகளிர்) — 7டி, 1சி — 657

**சண்டிலிப்பாய்**

காராலசிங்கம் சசிகரன் — (மானிப்பாய் இந்து) — 6டி, 1சி, 1எவ் — 582

ஜராங்கிணி யோகராஜா— (மானிப்பாய் மகளிர்) — 3டி, 5சி — 568

**கோப்பாய்**

ஜெயமாலா தர்மலிங்கம்— (நீர்வேலி அத்தியார்) — 5டி, 3சி — 601

சிவபாக்கியநாதன் ஸ்ரீசோதி — (கோப்பாய் இ. கல்லூரி) — 6டி, 1சி, 1எவ் — 591

**தெல்லிப்பழை**

திருச்செல்வி திருவாதவூரன் — (யூனியன் கல்லூரி) — 6டி, 2சி, — 645

சர்மிளா சண்முகலிங்கம்— (யூனியன் கல்லூரி) — 5டி, 3சி — 620 (அ)

## சுப்பசொனிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தில் ஒரு பேக்கரியும் இரு வீடுகளும் சேதமுற்றன. பல பனை மரங்களும் முறிந்து விழ்ந்தன

கெருடாவில் காணி ஒன்றில் — குண்டு வீழ்ந்த இடத்தில் — பெருங் குழி ஒன்று காணப்படுகிறது.

சற்றுநேரம் கழித்து — 11 40 மணியளவில் — திடீரென வந்த சுப்பசொனிக் விமானம் ஒன்று சாவகச்சேரிப் பகுதியில் றொக்கட் தாக்குதலை அடுத்தடுத்து நடத்தியது.

றொக்கட்டுகள் தபாற்கந்தோர் வீதியில் — பெருங்குளம் சந்தி உள்ளிட்ட — கெருடாவில் பகுதிவரை வீழ்ந்து வெடித்தன.

றொக்கட் தாக்குதல் அதிர்ச்சியால் மீசாலை தெற்கைச் சேர்ந்த சிற்றம்பலம் பிறைசூடி (வயது 50) மரணமானார்.

நொம்புவிலைச் சேர்ந்த முனுசாமி தவசிமணி (வயது 30), நடராசா இரத்தினம்மா (வயது 48), காசித்தம்பி தங்கம்மா (வயது 80), இராமலிங்கம் ஜெயிலக்சன்னி (வயது 35), இராமு சின்னத்தம்பி (வயது 62) ஆகியோர் இச்சம்பவத்தில் படுகாயமுற்றனர். இவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் பின்னர் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டனர்.

சாவகச்சேரியில் புக்காரா தாக்குதல் நடத்திய சமயம் ஹெலி ஒன்றும் வட்டமிட்டது.

முதலில் புக்காரா தாக்குதல் நடந்த கையோடு நகர்ப் பகுதியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் மூடப்பட்டன. மாணவர்கள் வெளியேறிக்கொண்டிருந்த வேளையில் சுப்பசொனிக் விமானங்கள் வந்து வட்டமிட்டதால் மாணவர்களும், ஆசிரியர்களும் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்ற றொக்கட் தாக்குதலின் சிதறல்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளவிலும் வீழ்ந்தன.

இத்தாக்குதல்களை அடுத்து சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள கடைகள், அரச அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டன. நகரப்பகுதி வெறிச்சோடியது.

சுப்பசொனிக் விமானங்கள் மட்டுவில் வேதக்கேணி கந்தசாமி கோவிலடி வயல் பகுதியிலும் தாக்குதலை மேற்கொண்டன

குண்டுச் சிதறல்களால் வீதியில் விறகு கட்டிக் கொண்டு சைக்கிளில் சென்ற வழிப்போக்கர் இருவர் காயமடைந்தனர். அவர்களின் பெயர் விபரங்கள் தெரியவரவில்லை.

(உ-15-17-31-117-162)

## பலாலி படையினர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கந்தையா இராசரத்தினம் (வயது 52) என்ற புன்னாலைக் கட்டுவன் வாசி கழுத்தில் படுகாயமுற்றார். இவர் உடனடியாக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

வடமராட்சிப் பகுதியில் பல வீடுகளும் ஷெல்களினால் சேதமுற்றன; பயன்தரு மரங்கள் பல சேதமுற்றன; கால் நடைகளும் உயிரிழந்தன.

[உ–3–11–15–17–68–87–155–162]


## திருமண நன்றி நவிலல்

எங்களது மணவிழா நிகழ்ந்திட்ட வேளை
இதயமெலாம் அன்பு வெள்ளம் கொண்டோராய் வந்தே
மங்கலம் சேர் வாழ்த்துரைத்தும் பரிசளித்தும் நம்மை
மதித்திட்டீர் கௌரவித்தீர் உறவினர்காள் மற்றும்
அன்புடைய நண்பர்காள் அறிஞர்காள் அயல்வாழ்
அமுதனைய பண்பினர்காள் அனைவர்க்கும் எங்கள்
நன்றியினை உரைக்கின்றோம் வணக்கங்கள் கோடி
நவில்கின்றோம் மகிழ்வுடனே நவில்கின்றோம் நாமே.

ந. வித்தியாதரன் - ரட்ணகலா
(இணை ஆசிரியர்,
உதயன்)

கைலாசபிள்ளையார் கோயில் ஒழுங்கை,
நல்லூர். [சி–6928]

## தமிழீழக் கல்வி மேம்பாட்டு நிதியம்

''புண்ணியம் கோடி ஆங்கோர் -
ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

தமிழீழக் கல்விமேம்பாட்டுப் பேரவையினர் மேற்படி நிதியத்தைப் பொங்கல் திருநாளன்று ஆரம்பிக்கவுள்ளனர். மாவட்ட, கோட்ட மட்டங்களில் நிதியம் ஆரம்பித்து வைக்கப்பெறும்.

இந்நிதியம் பேரவையில் நோக்கங்களான, தமிழீழ மாணவர்களின் கல்விமேம்பாட்டை ஊக்குவித்தல்; ஆசிரியர்களின் வாண்மையை வளர்த்தல்; என்பவற்றிற்காகப் பயன்தரும் வகையில் உபயோகிக்கப் பெறும்.

நிதிவளம் படைத்தவர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள்; கூட்டுறவுச் சங்கங்கள், அறநிலையங்கள், தொண்டர் நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் சமூக நிறுவனங்களிடமிருந்து நிதி அன்பளிப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அன்பளிப்புகளை வழங்குவதற்கான விவரங்கள் செய்தித்தாள்கள் மூலம் அறிவிக்கப்படும். தொடர்பு கொள்ள விரும்புவோர்:

பெரும் பொருளாளர்,
தமிழீழக் கல்விமேம்பாட்டுப் பேரவை,
இல. 19, நாயன்மார்கட்டு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எழுதி விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(சி–6929)

## யாழ். வர்த்தகர் சங்கம்
## கலந்துரையாடலும், கருத்தரங்கும்

யாழ். நகர் சகல வர்த்தகர்களுக்குமான ஒரு கலந்துரையாடல் 07–01–1994 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நவீனசந்தை மேல்மாடி யாழ். வர்த்தகர் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் குறிப்பாக வர்த்தகர்களின் பங்களிப்பு பற்றி விரிவான கலந்துரையாடல் அரசியல்துறை பிரமுகர்களால் நடத்தப்படும்.

சகல வர்த்தக உரிமையாளர்களும் தவறாது நேரில் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

— செயலாளர்.

(சி–7011)

## எடிசன் அக்கடமி

********

(யாழ் இந்துக் கல்லூரி அருகில்)
411/1, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம்

## கல்வி ஆண்டு 1994

ஆண்டு 4 முதல் O/L வரை யாழ் பிரபல ஆசிரிய குழுவின் ஒருங்கிணைந்த சேவை

| | |
|---|---|
| கணிதம் : | திரு B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம்: | திரு இரா. செல்வவடிவேல் |
| | திரு J. J. கொலின்ஸ் |
| சமூகக்கல்வி: | திரு. K. S. முத்துலிங்கம் |
| தமிழ் | திரு தங்கவேல் |
| | திரு S. கார்த்திகாமத்தம்பி |
| ஆங்கிலம் : | திரு மனோரஞ்சன் |
| வர்த்தகம் : | திரு விக்கி |
| சமயம் : | திரு. கோ இராஜலிங்கம் |

ஆரம்பம் 06 - 01 - 1994
வியாழன் பி. ப. 4 மணி

முக்கிய குறிப்பு

★ O/L க்கு கணித, விஞ்ஞான பாடத்திட்டம் 8 ஆம் மாதம் பூர்த்தியாக்கப்படும்.
★ கடந்த 18 வருட வினாக்கள் மீட்கப்படும்.

[சி 6919]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 01 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜன 6

மட்டக்களப்பு மாவட்டம் அம்பத்தனைவெளி புளியடித்துறை என்னுமிடத்தில் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் மீது மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரவேங்கை குலோத்துங்கன் [தம்பிராசா முரளீதரன்- பெரிய போரதீவு] என்ற போராளியே வீரச்சாவு அடைந்தவர் ஆவார்.

[ஒ-3]

## தாவடி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லோஜிகா என்ற சிறுமியின் வயிறு இரண்டாகப் பிளந்து குடல் சிதறிய நிலையில் காணப்பட்டது.

மற்றொரு பெண்ணின் தலை மட்டுமே மாமரத்தின் கீழ் கண்டு எடுக்கப்பட்டது. எனைய உறுப்புகள் தசைத் துண்டங்களாக அங்கும் இங்கும் சிதறிக் கிடந்தன.

அப்பகுதி நேற்று நண்பகலில் சுடுகாடு போலக் காணப்பட்டது எங்கும் அழுகுரல்கள் கேட்ட வண்ணம் இருந்தது.

உபதபாலகத்தின் தஸ்தாவேஜுக்கள் தூக்கி வீசப்பட்டுக்கிடந்தன.

உயிரிழந்த பலரின் அவயவங்களும், சதைத் துண்டங்களும் அங்கும் இங்குமாக சிதறிக் கிடந்தன. அப்பகுதி எங்கும் இரத்தவாடை வீசியது.

விமானங்களைக் கண்டு பங்கருக்குள் தஞ்சமடைய ஓடிய சமயமே மேற்படி நால்வரும் குண்டு வீச்சுக்கு இலக்காகிப் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுதுமலைப்பகுதியில் இடம் பெற்ற குண்டு வீச்சில் தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

(உ-3-15-17-68-69-143 -162)


## புதிய புதுவை
## கல்வி நிலையம்
புத்தூர்

SPOKEN ENGLISH BY BRITTO

ஆரம்பம்:
07-01-1994
வெள்ளி
காலை 8–00 மணி

(28793)

விற்பனையாகிறது!

அறிவுக் களஞ்சியம் 19

(சி/7008)

## கோழி குஞ்சுகள் விற்பனைக்கு

HYLINE BROWN
(கைலைன் பிறவுண்)
9 நாள் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு

"மல்லிகாபதி"
சந்தை கிழக்கு -
ஒழுங்கை,
மானிப்பாய்

[28795]

SPOKEN ENGLISH

ஆரம்பம்:-
09 - 01 -1994
(8 மணி)
BY BRITTO

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி யாழ்.
(...)

## எலைற் கல்வி நிறுவனம்

1994 ஆம் ஆண்டுக்கான
புதிய வகுப்புகள்

ஆரம்பம்: இன்று (06 - 01 - 1994) வியாழன் பி. ப. 3. 00

ஆண்டு 4 தொடக்கம் G. C. E. O/L வகுப்புவரை

அனுபவம் மிக்க ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.

எலைற் கல்வி நிறுவனம்
(வண்ணை தபால் நிலையம் முன்பாக)
99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(சி–7010)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருளம்மா ஞானப்பிரகாசம்
(செல்லம்)

திருமதி அருளம்மா ஞானப்பிரகாசம் 4–1–94இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மடுத்தீன் ஞானப்பிரகாசம் (பொன்னுத்துரை), அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற திருமதி டெய்சி சூசைப்பிள்ளை, திருமதி விக்ரோறியா ஸ்ரனிஸ்லஸ் (லில்லி), அருட்தந்தை எட்மன் மைக்கல் (அ.ம.தி) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்றவர்களான பசுபதி செல்லையா, பசுபதி இராசையா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை சூசைப்பிள்ளை, பிலிப் ஸ்ரனிஸ்லஸ் ஆகியோரின் மாமியும், பெஞ்சமின், இம்மனுவல், திருமதி மேரி இராணி இம்மனுவல், றெஜினோல்ட் றவிச்சந்திரன், திருமதி சாந்தினி றவிச்சந்திரன் ஆகியோரின் பேர்த்தியும், பிரதீபன், தீபா, சோபா, ஜனார்த்தனி (றுக்மா), ஹேமா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

நல்லடக்கம் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
திருமதி விக்டோரியா ஸ்ரனிஸ்லஸ்
(லில்லி – மகள்)

'பிரகாஸ்'
50, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். [28811]

### ஆறுமுகம் சிவகாமி
(மண்கும்பான் 4 ஆம் வட்டாரம்)

திருமதி ஆறுமுகம் சிவகாமி 5-1-94 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விசுவநாதி வள்ளியம்மையின் அன்பு மகளும், வைத்திலிங்கம், திருமதி ஆறுமுகம் வியாளாச்சி அவர்களின் அன்புச் சகோதரியும், சவுந்தரம், இராசம்மா, குமாரசாமி, சின்னத்துரை (திருநெல்வேலி மார்க்கட்), சின்னம்மா, பாலசிங்கம், மகேந்திரம் (திருநெல்வேலி மார்க்கட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தருமலிங்கம், தெய்வேந்திரம், கந்தசாமி, இலெட்சி, பவளம், சற்குணம் (திருநெல்வேலி மார்க்கட்), வீரகத்திப்பிள்ளை ஆகியோரின் பெரிய தாயாரும், காலஞ்சென்ற நாகரெத்தினம், பண்டா, நேசமலர், நாகேஸ்வரி, செல்வரெட்ணம், விஜயா, இராசமணி, இன்பம், பவளம், இராசேஸ்வரி, செல்வராசா, வேவி, ராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6-1-94) வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு சின்னத்துரை அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
கணவன், பிள்ளைகள்

புது வீதி,
ஆறுகால்மடம். (28810)

### திருமதி வினாசித்தம்பி சின்னம்மா

அச்செழுவைச் சேர்ந்த திருமதி வினாசித்தம்பி சின்னம்மா 5-01-1994 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு வினாசித்தம்பியின் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், செல்வநாயகம் (இளைப்பாறிய தபால் அத்தியட்சகர்), காலஞ்சென்ற செல்லத்துரை (இளைப்பாறிய T. A.), திருமதி நவரத்தினசிங்கம் - தவமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், நேசரத்தினம், கனகமணி, நவரத்தினசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தயாபரன், ரூபினி, சாந்தினி, யோகேஸ்வரன், ஸ்ரீதரன், பகீரதன், திவாகரன், சிவகாந்தன் - மக்கரி, மாலதி, வரதன் - பவானி வசந்தன், வதனி, வதனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (6-01-1994) முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக அச்செழு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. செல்வநாயகம்
(மகன்)

அச்செழு,
நீர்வேலி. (6767)

### செல்வி குலேந்திரா கோபாலசிங்கம்
(சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி மாணவி)

மட்டுவில் கனகம்புளியடியைச் சேர்ந்த செல்வி குலேந்திரா கோபாலசிங்கம் (சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி O/L மாணவி) 5–1–1994 கொடிய விமானத் தாக்குதலில் அகாலமரணமானார்.

இவர் கோபாலசிங்கம் (C. T. B. கோண்டாவில்) இந்திராணி தம்பதிகளின் மூத்த புதல்வியும், மாறன், விஜயன், டயாளினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரவணமுத்து, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (6–1–94) வியாழக்கிழமை 2 மணியளவில் மட்டுவில் கனகம்புளியடி கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[illegible] சத்தியரூபன்
(மாமன்)

கனகம்புளியடி கிழக்கு,
மட்டுவில். (28809)


## வைத்தியம்

வேலணை வைத்தியர் ச. சிவசம்புவின் வைத்திய சேவை மீண்டும் 198/1, பொன்னப்பா ஒழுங்கை, மானிப்பாய் வீதியில் (ஓட்டுமடம் சந்திக்கு அண்மையில்) நடைபெறுகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

- வைத்தியர் ச. சிவசம்பு

[28799]


## நீங்கா நினைவில்
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
## செல்லையா கௌரிபாகன்
(ஜெயா)

தோற்றம் 13–10–1970 மறைவு 06–01–1993

என்றும் எமது நினைவுகளில் நீங்காது நிற்கும் ஜெயாவே, தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, மகள் சரேகா,
பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

டச் வீதி,
சித்தன்கேணி. (28805)

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை செல்வராஜா

காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை செல்வராஜா 2 – 1 – 94 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற முகாந்திரம் ஆ. ச. சங்கரப்பிள்ளை வள்ளியம்மையின் அன்பு மகனும், புஸ்பா லோசனியின் அன்புக் கணவரும், பிரவின்சங்கரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற முத்துலிங்கம் தனபாக்கியத்தின் மருமகனும், காலம்சென்ற திரு. திருமதி ஆ. ச. கந்தையாவினதும், திரு. திருமதி ஆ. ச. ஆறுமுகம் அவர்களினதும் பெறாமகனும், அன்னம்மா (இந்தியா), இராசரத்தினம், ஞானப்பிரகாசம் (லண்டன்), பத்மாவதி (அபுதாபி), இராஜேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரினதும் சகோதரனும் டாக்டர் வைத்தியலிங்கம் (இந்தியா), பாலசண்முகம் (அபுதாபி), மனோன்மணி, வசந்தாதேவி (லண்டன்), தனபாலசிங்கம், சுகந்தமலர் ஆகியவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (6 – 1 – 94) 98, மேட்டுத்தெரு கொழும்பு - 13 இல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
த. ராஜேஸ்வரி
(சகோதரி)

இல. 4, செட்டித்தெரு,
நல்லூர். (28804)

### யோ. அந்தோனிப்பிள்ளை

நவாலியூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் ஆண் தாதியாக (Male Nurse) கடமையாற்றி ஓய்வு பெற்றவருமான யோ. அந்தோனிப்பிள்ளை 5-1-94 புதன் கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி அந்தோனியாப்பிள்ளையின் கணவரும், திரு. மரியாம்பிள்ளை (ஓய்வு பெற்ற சிறைச்சாலை அதிகாரி), தொம்மைக்குட்டி (ஓய்வு பெற்ற சங்கீத நடன ஆசிரியர்), செபநாயகம் (ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர், மன்னார்), பேரின்பநாதன் (ஆங்கில ஆசிரியர், நவாலி A.M.T.M.S.), செபமணி (ஆங்கில ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), திருமதி மரியதாஸ் (ஓய்வு பெற்ற அதிபர் நவாலி ஸ்ரேஷன்), திருமதி ராஜரட்ணம், திருமதி இருதயநாதன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அருமைத் தந்தையும் Dr. மரியதாஸ் ராஜரட்ணம் (காலஞ்சென்ற அதிபர்), இருதயநாதன் (தொழில் நுட்ப அலுவலர், கட்டடத் திணைக்களம்). திருமதி லூர்துமேரி திருமதி றெஜீனா, காலஞ்சென்ற திருமதி அருளம்மா, திருமதி மரியநாயகி திருமதி றோசம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு திருமதி இருதயநாதனின் இல்லத்தில் இன்று பி.ப. 3 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
திரு A.C செபநாயகம்

''அன்னை இல்லம்''
நவாலி தெற்கு,
மானிப்பாய். (28807)

### எட்வேட் நல்லையா
(இளைப்பாறிய அதிபர், வேலணை)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கையில் வசித்தவருமான இளைப்பாறிய அதிபர் எட்வேட் நல்லையா நேற்று (5-1-94) காலமானார்

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் வரதராஜன் (பிரான்ஸ்), வரதராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருந்தவஈஸ்வரி (பிரான்ஸ்), பாரதிதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், உமாசங்கர், விக்டர், வரணியா, மயூரன், திவ்வியா, திவாஸ்கரன் ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வராஜா, காலஞ்சென்ற குணரட்ணம், அமிர்தலிங்கம், திருமதி சிவமணி சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நவரத்தினராசாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (6-1-94) பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி நல்லையா
(மனைவி)
ஏ. அமிர்தலிங்கம்
(அமுதம்)
வேலணை 3

51, 3 ம் ஒழுங்கை
பலாலி றோட்
யாழ்ப்பாணம். (28808)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org